IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.

DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 44/2019

Deposition of witness for prosecution : PW1

Defense :

Name : ரகமதுல்லா

Father's Name : உசேன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2023

முதல் விசாரணை

**1, 2 , 3, எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி இறப்பு**

1. நான் தற்போது நெ.19, 2வது தெரு எம்.ஆர் நகர், வியாசர்பாடி சென்னையில் வசித்து வருகிறேன். சம்பவத்தின்போதுநான் எண்.3, 19வது தெரு,வியாசர்பாடியில் வசித்து வந்தேன். நான் கூலிங் கிளாஸ் வியாபாரம் செய்து வருகிறேன்.

2. நான் 2016ம் ஆண்டு ஆரணி வேம்புலியம்மன் கோவில் திருவிழாவின்போது தாலுக்கா அலுவலகம் அருகில் நான் கடை போட்டேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகள் தெரியாது. 4ம்எதிரியை தெரியாது.

3. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ளதுஎன்னுடைய கையெழுத்து தான். புகாரில் உள்ள கையெழுத்தை காவல் நிலையத்தில் வெள்ளை தாளில் போட்டேன். காவல் நிலையத்தில் என்னை அழைத்து கையெழுத்து பெற்றார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.1.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

1. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தபோது 23.07.2016 அன்று நடைபெற்ற வேம்புலி அம்மன் திருவிழாவில் கூலிங் கிளாஸ் கடை போட்டு வியாபாரம் செய்து இருந்தேன்என்றும், அப்போது ஆஜர் எதிரிகள் கும்பலா கவந்து கண்ணாடி வாங்கி கொண்டு பணம் கொடுக்கமாட்டேன் என்றுதகராறு செய்தார்கள்என்றும் அப்போது எதிரிகள் வெளியூரில் இருந்துவந்து கடை போட்டுக்கொண்டு கண்ணாடி தர ம ாட்டேன்என்கிறாய் என்றுகேட்டார் என்றால் சரியல்ல.

2. அப்போது சங்கர் என்கிற கோபால் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது இடதுபக்க இடுப்பில் இதோடு ஒழிந்து போ என குத்தினார் என்றும் அதை தடுக்க வந்த எங்கள் ஊரை சேர்ந்த ஜெயலானி மகன் உசேன் என்பவரை அவர் மீது கத்தியால் இடது பக்க கன்னத்தில் குத்தினார் என்றும், தினேஷ் பிரகாஷ்ராஜ் இருவரும் என் சட்டையை பிடித்துதோள் பட்டையில் அடித்தார்கள் என்றும்,

3. திருமுருகன் காலால் வயிற்றின் மீது எட்டி உதைத்தார் என்றும் லோகேஷ் கல்லால் என் உடம்பு முழுவதும் குத்தினார் என்றும் பூவரசன் என் தலை முடியை பிடித்து மார்பில் குத்தினார் என்றும் அப்போது எங்கள் கடையில் இருந்த ஒரு சவரன் செயினை எடுத்து கொண்டு போய்விட்டார்கள் என்றும் அவர்களை பிடிக்க முயன்றபோது ஆஜர் எதிரிகள் அனைவரும் ஓடிவிட்டார்கள் என்றும்,

4. அங்கிருந்தவர்கள் என்னை ஆரணி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள் என்றும் வேலுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என்னை போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்று போலிசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரிளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.